பார்ப்போமானால் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால், சட்டங்களை நிறைவேற்றுவதிலே ஆங்காங்கே குறை பாடுகளும், குளறுபடிகளும் வேறு பல நிலைமைகளும் ஏற்பட்டு விட்டன. ஓடையாக இருந்தாலும் ஏரியாக இருந்தாலும், அதனுடைய சுற்றுப் புறத்திலே உள்ள மலைப்பாங்கான பகுதிகளில், வேறு பல இடங்களில் பெய்கின்ற மழை வாய்க்கால் வழியாக வந்து, அந்த ஓடைகளிலே, குளங்களிலே, ஏரிகளிலே நிரம்பவேண்டும். நிரம்பியதற்குப் பிறகு கால்வாய் மூலமாக வயல்களுக்குப் போய் பாய வேண்டும். இப்போது என்ன ஆகியிருக்கிறது என்றால் ஓடைக்கு வருகின்ற, ஏரிக்கு வருகின்ற வாய்க்கால்கள் அடைக்கப் பட்டுவிட்டன. ஏரிகளிலிருந்து வாய்க்கால்களுக்குச் செல்கின்ற கால்வாய்கள் அடைக்கப் பட்டுவிட்டன. இடையிடையே வீடுகள் கட்டப்பட்டு விட்டன. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டதைத் தடுப்பதற்கு சட்டங்கள் இருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்தாத அளவிற்கு ஆங்காங்கே சூழ்நிலைகளும், குளறுபடிகளும், குறைபாடுகளும் இருப்பதால், இந்த விளைவுகள் ஏற்படுகின்றன. இதைச் சரியாகக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிர்வாகத் துறையினர் ஆங்காங்கு எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே அந்த முயற்சியிலேதான் கொண்டு வர வேண்டுமே தவிர, சட்டத்தைப் பொறுத்தவரையில் அது தெளிவாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நில ஆக்கிரமிப்பு பற்றிய கேள்விகள், வினாக்கள்—விடைகள் நேரத்தில் அதிகமான நேரத்தை ஆக்கிரமித்து இருக்கின்றன. ஆகவே இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். 15 உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்கிறார்கள். அமைச்சர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெறிநாய்க் கடிக்கு நவீன சிகிச்சை முறை.

6—(*வினா எண். 4456)—திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெறிநாய்க் கடிக்கு நவீன சிகிச்சை முறைகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

1987 மார்ச் 2]

டாக்டர் ந. மாசிலாமணி : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஆண்டி ராபிஸ் வேக்சின்' என்கிற வெறி நாய் தடுப்பு ஊசி அரசு மருந்தகங்களிலே வருமானச் சான்றிதழ் பெற்றவர்களுக்கு, வருமானத்தின் அடிப்படையிலே இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த நிலையை மாற்றி ஏழை—பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் இலவசமாக இந்த ஊசி கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது பற்றி அரசு பரிசீலிக்கும்.

பொன்னேரி தாலுக்கா மருத்துவமனையை விரிவுபடுத்தல்.

7—(*வினா எண் 5524) திரு. கே. பி.கே. சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பொன்னேரியில் உள்ள தாலுக்கா மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே.பி. கே. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரியில் உள்ள அந்த தாலுக்கா மருத்துவமனை, பொன்னேரி கிராமத்திலேயே மிகப் பெரிய மருத்துவமனையாக இருக்கிறது. இதைச் சுற்றி அதிகமான கிராமப் பகுதிகள் இருக்கின்றன. இருந்தாலும் இந்த மருத்துவமனை இன்னும் விரிவுபடுத்தப்படாமல் பாதியிலே நிற்கிறது. ஆகவே இந்த மருத்துவமனையை விரிவுபடுத்தி, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு வசதி செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகர் : தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்று சொன்னேன். நிதி ஆதாரத்தைப் பொறுத்து இதை அரசு பரிசீலனை செய்யும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS